**செய்தி வெளியீடு எண் : 540** **நாள்: 05.04.2022**

## <u>செய்தி வெளியீடு</u>

**<u>பெலாக்குப்பம் சிப்காட் தொழிற்பூங்கா வளாகத்தில்</u>**
**<u>ரூ.500 கோடி மதிப்பீட்டில்</u>** <u>செய்யார் SEZ டெவலப்பர்ஸ் பிரைவேட் லிமிடெட்</u>
<u>நிறுவனத்தின்</u> **<u>காலணி தயாரிக்கும் தொழிற்சாலை</u>**
**<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (5.4.2022) விழுப்புரம் மாவட்டம், பெலாக்குப்பம் ஊராட்சியில், சிப்காட் தொழிற்பூங்கா வளாகத்தில் செய்யார் SEZ டெவலப்பர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் 500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படவுள்ள காலணி தயாரிக்கும் தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டினார்.

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், பெலாக்குப்பம் சிப்காட் தொழிற் மையத்திற்கு 634.42 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு தொழில் முனைவோருக்கு அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளும் வழங்கிடும் வகையில் தயார்படுத்தப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக, லோட்டஸ் புட்வேர் எண்டர்பிரைசஸ் லிமிடெட் நிறுவனத்தின் துணை நிறுவனமான M/s செய்யார் SEZ டெவலப்பர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் தொழிற்சாலை அமைத்திட 167.41 ஏக்கர் இடம் வழங்கப்பட்டு, அந்நிறுவனம் மூலம் ரூ.500 கோடி மதிப்பீட்டில் தொழில் தொடங்கிட உள்ளது. இதன்மூலம், இப்பகுதியினை சேர்ந்த 6,000 நபர்கள் வேலை வாய்ப்பு பெற்று பயனடைவர்.

2006-ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், இந்தக் குழுவின் இந்தியத் தலைவர் திரு. பீட்டர் நிக்கர்சன் அவர்களும் இணைந்து இந்த நிறுவனத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டனர். அதனடிப்படையில் 2009-ஆம் ஆண்டு செய்யார் சிப்காட் பகுதியில் 300 கோடி ரூபாய் முதலீட்டில் 5,000 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்புடன் கூடிய சிறப்பு பொருளாதார மண்டலம் அப்போதைய மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. தொடர்ந்து, 2015-ஆம் ஆண்டு கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூரில் தனது 2-வது சிறப்பு பொருளாதார மண்டலத்தினை 360 கோடி ரூபாய் முதலீட்டில் 10,000 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு வழங்கும் வகையில் தொடங்கியது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில், 20.7.2021 அன்று நடைபெற்ற **“முதலீட்டாளர்களின் முதல் முகவரி – தமிழ்நாடு” என்ற விழாவில்,** 13,000 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பை வழங்கும் நோக்கத்துடன் இந்நிறுவனம் 1,060 கோடி ரூபாய் முதலீடு செய்ய புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

அதன் தொடர்ச்சியாக, அந்நிறுவனத்தின் 3-வது சிறப்பு பொருளாதார மண்டலத்தினை திண்டிவனம் வட்டம், பெலாக்குப்பம் ஊராட்சி சிப்காட்

தொழிற்பூங்கா வளாகத்தில் 500 கோடி முதலீட்டில் இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

**இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு, மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு.செஞ்சி கே.எஸ்.மஸ்தான், நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் து.ரவிக்குமார்,** சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.நா.புகழேந்தி, டாக்டர் இரா.இலட்சுமணன், திரு. எ.ஜெ. மணிகண்ணன், திரு. சி. சிவகுமார், **தொழில் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. எஸ். கிருஷ்ணன், இ.ஆ.ப., சிப்காட் மேலாண்மை இயக்குநர் திரு. டி.ஆனந்த், இ.ஆ.ப.,** MEPZ **சிறப்புப் பொருளாதார மண்டலத்தின் மேம்பாட்டு ஆணையர் திரு. எம்.கே. சண்முகசுந்தரம், இ.ஆ.ப.,விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. த.மோகன், இ.ஆ.ப., மாவட்ட ஊராட்சித் தலைவர் திரு. ம.ஜெயச்சந்திரன், செய்யாறு சிறப்புப் பொருளாதார மண்டல மேம்பாட்டு நிறுவனத்தின் தலைமை மேலாண்மை இயக்குநர் திரு. அருள், இயக்குநர் திரு. சுனில், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.**

••••••••••••

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in